ஸ்ரீ

# பகவத் கீதாசாரம்

## காப்பு

அர்ச்சுனனின் தேர்தட்டில் சாரதியாக வீற்றிருந்து, அருள் மொழிகளால், அவனது மனத் துயரத்தைப் போக்கி அருளிய கருணா மூர்த்தியான ஸ்ரீ கிருஷ்ணன் எம்மைக் காத்து அருளாவானாக.

1. துக்கத்தால் விழிகளில் கண்ணீர் பெருகிடத் தவிக்கும் பார்த்தன், இரக்கம் மேலிட்ட உள்ளத்துடன், அவனை அருட் கண்ணால் பார்த்து கீதாசாரியன் இந்த உபதேசத்தை - பகவத் கீதையை, வகுத்துக் கூறலானான்.

ஸ்ரீ

# பகவத்கீதாசாரம்

## காப்பு
(வேறு)

பார்த்தன் றேரினல், வார்த்தை யாலவன்
ஆர்த்தி போக்கருண், மூர்த்தி காக்கவே.

## நூல்
(கலிவெண்பா)

கருணை மிகுந்த கருத்தனுய்த் துக்கம்
பெருகி விழிநீர் பெருக — வருந்துமப்
பார்த்தன் றுயரகலப் பார்த்துமது சூதனனிவ்
வார்த்தை யுரைத்தான் வகுத்துணரப் — பார்த்தனே 1

2. பார்த்தனே! இந்த 'சரீரம் க்ஷேத்ரம்' என்று சொல்லப்படுகிறது. எவன் சரீரத்தில் இருந்தவாறே அதை தனக்கு அன்னியமாக உணர்வானோ அவன் ஆன்மா எனப்படுவான். அந்த ஆன்மாவை அனுபவமாக அறிந்தவர்கள் அதை க்ஷேத்ரஞ்ஞனென்று கூறுவார்கள்.

3. வலிமைமிக்க எல்லா சரீரங்களுள்ளும் இருக்கின்ற என்னை, ஆன்மாவாகத் தெரிந்து கொள்வாய். க்ஷேத்ரம், க்ஷேத்ரஞ்ஞன் இயல்பை அறியக்கூடிய ஞானம் எதுவோ அதுவே மெய்யறிவாகும். இதுவே எனக்கு சம்மதமான கருத்தும் ஆகும்.

4. சகல உயிர்களின் உள்ளத்தினுள்ளும் அமர்ந்திருக்கின்ற ஆன்மா நானே. சகல உயிர்களின் உற்பத்திக்கும், இருப்பிற்கும், மறைவிற்கும் ஆதி காரணம் ஆனவன் நானே என்பதை அறிவாயாக.

5. பிறந்தவர்கள் இறப்பது என்பது சர்வ நிச்சயம். அதுபோல் இறந்தவர் மீண்டும் பிறந்தே தீருவார் என்பதும் உறுதி. இது விலக்க முடியாத ஒரு விதியாகும். இதில் நீ வீணாகக் கலக்கம் அடைவது ஏன்? சொல்வாயாக.

6. பிறப்பு-இறப்பு இரண்டும் இல்லாத இந்த ஆன்மா, பிறந்து, இருந்து, பின் ஒருகாலத்தில் இல்லாது போவதில்லை. அது பிறப்பில்லாத, எப்போதுமுள்ள பொருள். அது அழிவற்றது. தேகம் கொல்லப்பட்டாலும், அவன்ஆன்மா கொல்லப்படாதவன். அவன் புராதனன் என்பதை நீ உள்ளத்தில் உணர்வாயாக.

7. ஆன்மாவை வெட்ட முடியாது, எரிக்க முடியாது, நீரில் நனைக்கவோ, வெய்யிலில் உலர்த்தவோ முடியாது. இவன் நித்தியன். எங்கும் உள்ளவன். ஸ்திரமானவன். எங்கும் தானாகத் தங்கி இருக்கின்ற அசல சொரூபனும் அவன்தான்.

8. உலகம் அனைத்தும் எதனால் நிறைவு அடைந்து பொருந்துமோ அந்த வஸ்துவே அழிவற்றதென்று அறிவாய். அழிக்கமுடியாத அந்த ஆன்மாவை அழிக்கக்கூடிய வல்லமையாளன் யாரும் இருக்க முடியாது என்று அறிவாய்.

தேகமிது சேத்திரமாச் செப்பப் படுமிந்தத்
தேகத்தை யாவன் றெரிவனோ — தேகியவன்
சேத்திரஞ்ஞ னாமென்று செப்புவார் தாமதனைப்
பார்த்தறிந் தோர்கள் பகுத்துணர்வாய் — காத்திரமாம் 2

சேத்திரங்கள் யாவுள்ளுஞ் சேர்ந்தே யிருக்கின்ற
சேத்திரஞ்ஞ னாவென்னைத் தேர்வாயே — சேத்திரஞ்
சேத்திரஞ்ஞன் றன்மை தெரிகின்ற ஞானமே
தோர்த்திடஃ தேயெனக் கொப்பொன்றாய்ச் — சேர்த்துணரும் 3

ஆன்மாக்கள் யாவி னகத்து மமர்கின்ற
வான்மாயா னாவ னருச்சுனா — வான்மாக்கட்
காதியொடு மத்தியமு மந்தமு மாமிவைக
ளாதியாம் யானே யறிமெய்யெப் — போதும் 4

பிறந்தா ரிறக்கப் பெறுத லுறுதி
யிறந்தார் பிறப்ப தெனலு — முறுதி
விலக்கற் கரிய விதியிதினீ வீணே
கலக்க முறலேன் கழறாய் — கலக்கும் 5

பிறப்பிறப்பில் லானென்றும் பின்னு மிவன்றான்
பிறந்து கழியப் பெறானே — பிறவாதா
னென்றுமுளன் சாசுவத னிவ்வுடல்கொல் லப்படினுங்
கொன்றுபடான் றெல்லோனுட் கொள்ளுக — வென்றும் 6

இவன்றுணிக்க வொண்ணா னெரிக்கவொண் ணாதா
னிவனனைக்க வற்றவொணா னேது — மிவனித்த
னெங்குமுளன் றானு வியல்பாற் சனாதனன்
றங்கு மசலனே தானான்மா — பங்கில் 7

எதனா னிறைவெய்து மேயுமிவை யாவு
மதழிவில் லாத தறிவா — யெதனானு
மாளாத வப்பொருளை மாளச் செயவல்ல
வாளாகா னாரு மறியுண்மை — கேளாய்நீ 8

9. பொய்யான பொருளுக்கு இருப்பு என்பது இல்லை. உண்மைப் பொருளுக்கு இல்லாமை இல்லை. இல்லாத பொருள், உள்ள பொருள் இந்த இரண்டின் உண்மையான தன்மை இது என்று கண்டவரே ஆன்மாவை அறிந்தவர் ஆவர்.

இல்லா ததனுக் கிருப்பில்லை யுள்ளதனுக்
கில்லாமை யென்ப திலையெனவே — யில்லதுள
தென்னு மிரண்டி னியல்பிதுதாங் கண்டார்மெய்
தன்னை யறிந்த தவர்மெய்யின் — மன்னிடினும் 9

10. எங்கும், எல்லா பொருள்களிலும் ஆகாயமானது வியாபித்திருந்தாலும், நுட்பமான தன்மையினால், தான் தங்கி இருக்கின்ற பொருள்களின் குணங்களைப் பற்றாமல் இருப்பதுபோல் ஆன்மா தேகமெங்கும் இருந்தாலும், அந்த தேகத்தோடு ஒட்டாது, எவ்வித சம்பந்தமும் இல்லாமல் இருப்பதென்று நீ தெளிந்திடுவாய்.

எங்குமெவற் றும்விண் ணிருந்தாலு நுண்மையினாற்
றங்குமவற் றிற்பற்றாத் தன்மைபோ — லெங்குமே
தேகத் திருந்தாலுந் தேகியா மான்மாவுந்
தேகத்தி லொட்டான் றெளியொளிவிண் — ணாகைக் 10

11. ஆன்மாவை சூரியன், சந்திரன், அக்கினி முதலியவற்றால் பிரகாசிக்கச் செய்ய முடியாது. எந்த ஸ்தானத்தை அடைந்தவன் சம்சாரத்திற்குத் திரும்புவதில்லையோ அந்த இடம்தான் என்னுடைய மேலான வீடாகும் என்று அறிவாய்.

கதிரோன் மதியுங் கனலுமெக் காலு
மதனை யொளிர்வித்த லாகா — தெதனை
யடைந்தே மடங்காரோ வஃதுபர மாமென்
னுடையவீ டாமெனவே யோர்வாய் — வடிவற்(று) 11

12. வடிவற்றதும், உதிக்காததும், நாசமற்றது என்றும் சுருதிகளால் கோஷிக்கப்படுகிற அது, மிக உன்னதமான சொரூப நிலை என்று கூறுகிறார்கள். எந்த நிலையை அடைந்து, கலந்தவர் மீண்டும் திரும்பி வருவதில்லையோ அதுதான் எனது மேலான பரமபதமாகும் என்பதை நீ உணர்வாய்.

உதியா தொழியாதென் றோதிடப் பட்ட
வதுமே னிலையென் றறைவ — ரெதனை
மருவித் திரும்பாரோ மற்றஃதென் மேலா
மரியவீ டாகு மறிவாய் — கருவஞ்சேர் 12

13. கருவம் சேர்ந்த தேக அபிமானத்தை விட்டவராய், மயக்கம் இல்லாதவராய், ஆசா, பாசங்களை நீக்கியவராய், சதா காலமும் ஆன்மாவினிடத்திலே நிலைபெற்று இன்ப-துன்ப இரட்டைகளில் விடுபட்டவராய் உள்ள அவர்கள் அழிவற்ற மோட்ச வீட்டை அனுபவிக்கும் ஞானிகள் ஆவர்.

மானமிலார் மோகமிலார் மாற்றினார் சார்பாசை
தாநிலைத்தா ரெக்காலுந் தன்னிலே — யூனசுக
துக்கமெனுந் தொந்தந் தொலைந்தவரா ஞானியரவ்
வக்கரவீ டாளு மவராசை — மிக்க 13

14. ஆசை மிகுந்து, சாஸ்திர வழிகளில் நடப்பதைத் தவிர்த்து, மனம் போன போக்கில் எவன் நடப்பானோ அவன் ஒருநாளும் புருஷார்த்த லாபம் ஆகிய சாந்தியையோ, சுகத்தினையோ அடையமாட்டான். முக்தியையும் அடையமாட்டான்.

எவனால் விதியை யிகந்திச்சை யேவு
மவவழி தன்னை யடுப்பா — னவனென்றுஞ்
சாரானே சித்தியொடு சாந்தி சுகத்தினையுஞ்
சேரானே முத்திச் சிறப்பதையு — நேராக 14

15. சகல உயிர்களின் உள்ளும் பிரத்யட்சமாக இசைந்துள்ள ஒரே சொரூபமாய், அழியக்கூடிய பூதங்களினிடத்து பொருந்தி இருந்தும் அழிவற்றவனாய், எல்லோராலும் காண இயலாத பரமேச்வரனை எவன் காண்கிறானோ அவனே காண்பவன் ஆவான். (மற்றவர்கள் காணாதவராவார்).

எல்லா வுயிர்களிலொத் தேகனாய் நாசமுறு
மெல்லாவற் றும்பொன்றா தேய்ந்தோனா — யெல்லோரும்
பார்ப்பதற் கொண்ணாப் பரமேச் சுரனையெவன்
பார்ப்பா னவனேபார்ப் பானயலார் — பார்ப்பாரோ 15

16. அனன்ய பக்தியினால் என்னை யார் தியானிக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்களுக்கே என்னை ஞானத்தினால் உள்ளபடி அறியவும், சம திருஷ்டியுடன் பார்க்கவும் பின் முக்தியை அடையக்கூடிய தகுதியையும் பெறும்படி நான் செய்வேன்.

17. பலவிதமான ஜீவர்களின் சுபாவத்திற்கு ஏற்றவாறு நம்பிக்கையானது எவருக்கும் தோன்றி செயல்படும். உலகத்தில் ஜீவனாய் உள்ளவன் சிரத்தையின் உருவமே. பூர்வ ஜன்மங்களில் செயல்பட்ட குணங்களின் சிரத்தையை அனுசரித்தே ஜீவனும் அந்த இயல்பு உடையவனாக உருப்பெறுவது சகஜம். இது யாவருக்கும் பொதுவானதே.

18. உண்மையை அறிய, ஆத்ம வித்தையில் சிரத்தையுள்ளவனாய் மனதில் விஷயங்களை புகவிடாமல், சொரூப தியானத்திலேயே ஊன்றிய சித்தையுடையவனாய், இந்திரியங்களை அடக்கியவனாய் உள்ளவன் ஞானத்தை அடைவான். அவன் விரைவிலேயே மேலான சாந்தியை அடைவான்.

19. உண்மை நிலையை அடைய என்னிடத்திலேயே மனதை திடமாக ஊன்றி, சதாகாலமும் உள்ளம் நெகிழ்ந்த பக்தர்களுக்கு எந்த யோகத்தினால் அவர்கள் என்னை அடையக்கூடுமோ அந்த மேன்மை மிக்க புத்தியோகத்தை என் அனுக்கிரகத்தினால் நான் கொடுத்திடுவேன் என்பதை அறிவாயாக.

20. என்னிடம் பக்தியுள்ள பக்தர்களின் புத்தியில் நான் இருந்து கொண்டு அவர்களுடைய அறியாமை என்னும் அனாதியான இருட்டை என் அனுக்கிரகத்தினால், மிகுந்த பிரகாசமுடைய ஞான தீபத்தினால் முற்றும் அழியும்படி செய்வேன் என்று உணர்வாய்.

21. அருள்பெறும் எவரது உள்ளத்தில் அறியாமையானது, ஆத்ம ஞானத்தினால் முற்றும் நாசமடைகிறதோ, அப்போது அந்த ஞானமானது சூரியனைப்போல பரம்பொருளை முழுமையாக விளங்கும்படி ஞான சூரியனாய் இருந்து பிரகாசிக்கச் செய்கிறது.

22. உலகில் தூல தேகத்தைவிட சூட்சும இந்திரியங்கள் சிறப்புள்ளவை. அதைவிட மேன்மையானது மனம். மனதைவிட நுட்பமானது புத்தியேயாகும். அதற்கும் மேலாக எவன் பிரகாசிக்கிறானோ, அந்த பரவஸ்துவே ஆன்மாவாகும் என்று நீ அறிவாய்.

அன்னிய மெண்ணுதை வன்பினு லென்னேயெவ
ருன்னிடுவா ரன்னவர்க்கே யுத்தமனே — யென்னேயிவ்
வாருக மெய்யா யறியத் தரிசிக்கப்
பேருக்கத் தக்கோன்யான் பின்பல — வாரும் 16

அவரவர் தன்மைக் கடுத்த படியே
யெவர்க்குஞ் சிரத்தை யெழுங்காண் — புவியிற்
சிரத்தை யுருபுருடன் சேர்சிரத்தைக் கொத்தே
புருடனு மாதல் பொதுமெய் — தெரியச் 17

சிரத்தையுள் ளோனே திருத்திப் பொறியைக்
கருத்தில் விடாதே கருதி — மருவுவான்
மெய்யறிவு மேவிப்பின் மேலான சாந்தியினே
யெய்துவான் சின்னுளி லிங்கிந்த — மெய்யுற 18

என்பாலே சித்த மிருத்தியெப் போதுமுள்
ளன்பாலே பத்திசெயு மன்பருக் — கென்னேயவர்
சார்வா ரெதனுலச் சற்புத்தி யோகத்தை
யீவேனு னென்னருளா லெண்ணதனேச் — சேர்வோராம் 19

அன்னவ ருள்ளத் தமர்ந்தே யருளதனுற்
றுன்னுமறி யாமையாந் தொல்லிருளே — மின்னு
மறிவாம் விளக்கா லறவே யிறுதி
யுறச்செய்வேன் யானென் றுணர்வாய் — பெறுமவ் 20

அறிவா லெவர்த மகத்தறி யாமை
யறவே யழிந்த தவர்த — மறிவும்
பரிதியைப் போலப் பரத்தை யொளிரப்
புரிவித் திடுமப் பொழுதே — தெரியுலகின் 21

மேன்மை யுறப்பொறிகண் மேவும் பொறிகட்கு
மேன்மன மம்மனத்தின் மேன்மதி — தான்மதியின்
மேன்மையா யாவன் மிளிர்வா னவன்றன்னே
யான்மாவா மென்ன வறியறிவா — மான்மா 22

23. அறிவாகிய ஆன்மா அந்த புத்திக்கும் மேலானது. நீ இவ்வாறு அறிந்து கொண்டு மனதை புத்தியில் நன்கு திடப்படுத்தி ஆன்மாவில் ஒன்றாகச் சேர்ந்து, யாராலும் வெற்றி கொள்ள முடியாத 'காமம்' என்னும் சத்ருவின் உருவத்தை நீ வெற்றி கொள்வாய்.

மதிக்குயர்விவ் வாறு மதித்தே மனத்தை
மதியா னிறுவியான் மாவின் — மதிசேர்
விசயா செயிப்பாய் வெலற்கரிய காம
நிசசத் துருவுருவை நீயு — மிசைந்தே 23

24. நன்கு எரியும் அக்னியானது, எரிபொருட்களை எல்லாம் எப்படி எரித்து சாம்பலாக்குமோ அப்படியே சுத்த ஞானமாகிய அக்னி சகல கருமங்களையும் மீதமின்றி பஸ்பமாக செய்திடும் என்று உணர்வாயாக.

எரியு மெரியு மெரிகரும்பை யெல்லா
மெரித்துநீ றுக்க லெனவே — யெரியா
மறிவுங் கரும மனைத்து மெரித்தே
யுறுவிக்கு நீறு வுணர்மெய் — யறிவான் 24

25. உண்மை அறிவால், எவனது செயல்கள் எல்லாம் ஆசை, சங்கல்பம் என்னும் இரண்டும் இல்லாமல் செயல்படுகின்றனவோ, அவனே ஞானாக்னியினால் தகிக்கப்பட்ட சங்கல்பரகிதன் ஆவான். அந்த வீரனை, ஆத்ம ஒளியை அடைந்த ஞான பண்டிதன் என்பர்.

எவனியக்க மெல்லாமு மிச்சையெண்ண மென்னு
மிவையில் லனவா வியங்கு — மவனே
யறிவெரியால் வெந்தவினை யானவனை யான்றோ
ரறிவொளிசேர் பண்டிதனென் றூர்மெய் — யறிவுற்றே 25

26. மெய்யறிவு பெற்றவர் ஆசையும், கோபமும் நீங்கி, அடங்கிய மனமுடையவராய், தேஜோ ரூபமான ஆன்மாவை அறிந்துணர்ந்த, சந்நியாசிகளான பந்தபாசமற்ற அந்த ஞானிகளுக்கு, பிரம்மானந்த சுகமானது எப்போதும் அனுபவமாக உள்ளது.

ஆசைசின மற்றூ ரடங்கு மனமுற்றூர்
தேசுறூஉ மான்மாவைத் தேரெதிகள் — பாசமில்
புத்த ரவருக்குப் பூரணநிர் வாணசுக
நித்தமனு பூதமா நேரதற்கா — வெத்தனித்துத் 26

27. ஞான சுகத்திற்காக, முயன்று தைரியத்தோடு கூடிய புத்தியினால், மனதை அதன் சுபாவமாகிய சலனத்தில் இருந்து விடுபடச் செய்து நேர்மையான வழியில் சேர்க்க வேண்டும். ஆன்மாவைத் தவிர வேறில்லை என்று அதிலேயே ஸ்திரமாக்க வேண்டும். சலனமற்ற மனதை ஆன்மாவில் ஒன்றுபடுத்தி வேறு எந்த சிந்தனையும் துளிகூட எண்ணாது இருக்க வேண்டும்.

தீரஞ்சேர் புத்தியினுற் சித்தத்தை மெல்லமெல்ல
நேரச் செயவேண்டு நிச்சலன — மாரதனே
சித்தத்தை யான்மாவிற் சேர்த்திடுக மற்றெதுவு
மித்தனையு மெண்ணிடா தேமந்தி — யொத்தே 27

28. நிலையாக இல்லாமல், குரங்குபோல, அலைபாயும் சித்தத்தை, எந்தெந்த விஷயங்களைப் பற்றிக் கொண்டு அது பகிர்முகமாக ஓடுகின்றதோ அந்தந்த விஷயங்களினின்று அந்த மனதை இழுத்து சதாகாலமும் ஆன்மாவிலேயே சேர்த்து ஸ்திரமாக நிலைபெறும்படி செய்வாயாக.

எதுவுந் திரமின்றி யென்றுமலை சித்த
மெதெதனைப் பற்றியே யேகு — மததினின்
றீர்த்தந்தச் சித்தத்தை யெப்போது மான்மாவிற்
சேர்த்துத் திரமுறவே செய்யிங்ஙன் — சேர்த்தே 28

29. இவ்வாறு சேர்த்த இந்திரியங்களையும், மனதையும், புத்தியையும் அடக்கி ஆசை, பயம், வெறுப்பு முதலான குணங்களை அடியோடு விட்டு சதாகாலமும் முக்தியையே நாடும் முனிவன் எவனோ அவனே முக்த புருஷன் ஆவான்.

ஒடுக்கிப் பொறியை யுளத்தை மதியை
விடுத்தாசை யச்சம் வெறுப்பு — மடுத்தென்று
முத்தி தனக்கே முனையு முனிவனெவன்
முத்தனே யந்த முனிவரனு — நித்தம் 29

30. தினமும், குறைவற்ற மனத்தினனாய், தன் சொரூபத்தில் நிலைபெற்றவனாய், எல்லாவற்றிலும் சமதிருஷ்டி உடையவனே சகல பூதங்களிடத்தும் ஆன்மாவாகிய தன்னையும், தன்னிடத்தில் சகல பூதங்களையும் காண்பான். அந்த யோகியானவன் பெரும் பாக்யவானாவான்.

31. தன்னில் நிலைபெற்று, ஆத்ம பாவத்திற்கு அன்னியமான எண்ணம் அணுமாத்திரமும் இல்லாது என்னையே சதாகாலமும் தியானித்து யார் உபாசனை செய்திடுவார்களோ, என்னிடத்தில் என்றும் ஒன்றும் அப்படிப்பட்ட பக்தர்களின் யோக க்ஷேமங்களை நான் எப்போதும் பொறுப்பேற்று நடத்துவேன்.

32. தன்னில் ஒன்றிய ஆத்ம ஞானியானவன் அனன்ய பக்தனாகிறான். இடைவிடாமல் ஆன்மாவிலேயே ஒன்று படுவதினால் அவனே யோகியும் ஆவான். அவன் எல்லோரையும்விட சிரேஷ்டனாகிறான். நான் அவனுக்குப் பிரியமானவன். அவனும் எனக்கு மிகவும் பிரியமானவனாவான்.

33. என்னைப் பிரியாத அவன் எண்ணற்ற பல பிறவிகளை எடுத்து பலவாறாக என்னையே உபாசித்து கடைசி பிறவியில் மகாத்மாவாகிறான். எப்போதும் என்னையே தியானித்து காண்பவை எல்லாம் வாசு தேவனே என்று உணர்ந்து உயர்ந்த ஞானியான அவன் யாவரிலும் மேலானவன். கிடைப்பதற்கு அரியவன்.

34. மனதிலுள்ள அளவற்ற ஆசாபாசங்களை முற்றும் அழித்து, தனக்குள் இருக்கும்தன் சொரூபத்திலேயே மகிழ்ச்சி அடைந்திடும் அவனை ஆத்ம ஞானி என்று நன்கு உணர்ந்த ஞானிகள் வகுத்துக் கூறுகின்றனர்.

35. எல்லா ஆசைகளையும் விட்டொழித்தவனாய், கிடைக்காத பொருள்களின் மீது பிடிப்பில்லாதவனாய், அகங்காரமும், மமகாரமும் இல்லாத அந்த புருஷ சிரேஷ்டனே என்றும் எப்பொழுதும் சாந்தி அடைவான் என்று அறிந்திடுவாய்.

36. மனம் அடங்கிய எவனிடம் இந்த உலகமானது பயமேதும் அடையாதோ, எவன் உலகைப் பார்த்து பயப்பட மாட்டானோ, எவன் விருப்பு-வெறுப்பு, பயம், மனக்கலக்கம் முதலானவைகள் இல்லாதவனோ, அவனே எனக்கு மிகவும் பிரியமானவன் ஆவான்.

*சகல வுயிர்களிற் றன்னையுந் தன்னிற்*
*சகல வுயிர்க டமையும் — விகலமறத்*
*தன்னினிலைத் தெங்குஞ் சமநோக்குள் ளான்காண்பன்*
*றன்னிய னந்தத் தவன்போல — மன்னினராய்* 30

*அன்னிய சிந்தை யணுவுமிலா தென்னையே*
*யுன்னியெவ ரென்று முபாசிப்பா — ரென்னிலே*
*யென்றுமொன்று மன்னவர்தம் யோகக்ஷே மங்களை*
*யென்றுந் தரித்திடுவேன் யான்றலையா — லொன்றும்* 31

*அவர்களின் ஞானி யனனிய பக்த*
*னவன்விடா யோகியு மாவ — னவனே*
*பெரிய னவற்குப் பிரியன்யா னெற்குப்*
*பிரிய னவனும் பெரிதும் — பிரிவில்லான்* 32

*எண்ணில்சென் மங்க ளிறுதி யதின்ஞானி*
*யெண்ணி யகத்திலெனை யெப்போது — மெண்ணி*
*யெலாம்வாசு தேவனென வென்னுறுவான் மான்மா*
*வெலார்க்கு மரிய னிவனெண் — ணிலாதே* 33

*அகத்துள பற்றெல்லா மற்றானெப் போதி*
*லுகப்புந் தனிற்றன்னு லுற்றான் — வகுத்தன*
*ரப்போ தவன்மெய் யறிஞனு ஞனென்று*
*மெய்ப்போத முற்றார் மிகத்தேர்ந்தே — யெப்போ(து)* 34

*இகந்தவனு யிச்சையெலா மெய்தாத திற்பற்*
*றகன்றவனு மாயுள்ளா னுர்தா — னகந்தை*
*மமதையு மில்லாவம் மாபுருட னென்று*
*மமைதி யுறுவா னறிவா — யமைந்த* 35

*எவன்பா லுலகுபய மேது முறாதோ*
*வெவனுலகுக் கஞ்சானோ வேது — மெவன்றா*
*னுவப்புவர்ப்பு பீதி யுளக்கலக்க மற்றோ*
*னவனெனக்கு மீப்பிரிய னுந்தே — ரெவனொருவன்* 36

37. எவனொருவன் கவுரவ, அவமானங்களில் சமநோக்கு உடையவனாய்; பகைவர்களிடமும், நண்பர்களிடமும் ஒரே மாதிரி இருப்பவனாகி; தன்னை விடாது பற்றி நிற்கும் எல்லா முயற்சிகளும் தானாகவே நீங்கினவனாய் உள்ள அவனை சகல குணங்களுக்கும் அப்பாற்பட்டவன் என்று கூறுவாய்.

38. நீங்காது எவன் ஆன்மாவிடத்திலேயே சுகித்திருப்பானோ, எவன் ஆத்ம சொரூபத்திலேயே திருப்தி அடைந்தவன் ஆவானோ, ஆன்மாவிலேயே மகிழ்ச்சியுற்று இருப்பானோ, அப்படிப்பட்ட ஞானிக்கு செய்வதற்கு ஒரு காரியமும் இல்லை.

39. அந்த ஞானி இந்த உலகத்தில் கர்மங்களைச் செய்து அதனால் எந்தவித பயனையும் அடையப்போவதில்லை. கர்மங்களை செய்யாத அவனுக்கு பாவமும் இல்லை. எந்த உயிர்களையும் ஆசிரயித்து, அவைகளினால் தான் அடையக்கூடிய எவ்வித பிரயோஜனமும் அவனுக்கு இல்லை.

40. ஞானி எங்கும், எவ்விதத்திலும் தானாக நிகழக்கூடிய பலன்களில் திருப்தி அடைவான். தொந்தங்கள் இல்லாதவன், யாரிடமும் எந்தவித பொறாமையும் இல்லாதவன். பிட்சை கிடைத்தாலும், கிடைக்காது போனாலும் சமமாக பாவிப்பவன். பிட்சை எடுக்க நேர்ந்தாலும் ‘தான் பிட்சை எடுக்கிறேன்’ என்ற கர்த்ருத்வ, புத்தி இல்லாததால் பந்தம் அடையமாட்டான்.

41. என்றும் பற்றற்ற பரமேசுவரன் எல்லா உயிர்களினுள்ளும் இதய ஸ்தானத்தில் தங்கி இருந்து எப்போதும் பிரகாசிக்கிறான். ‘பாசம்’ என்னும் மாயையினால் உயிர்கள் அனைத்தையும் அவன் சம்சார சக்கரத்திலேற்றி ஓய்வின்றி சுழற்றிக் கொண்டிருக்கிறான்.

42. உயிர்களின் அன்பனான அவனையே சரணம் அடைந்து, பாரதனே! அவனுடைய அனுக்கிரகத்தினால் சாந்தி சுகத்தினைப் பெறுவாயாக. அவன் அருளால் முக்தி பதத்தினையும் அடைந்திடுவாய். இதைவிட அடையத்தகுந்த பிற பேறு எதிலும் எங்கும் இல்லை.

பகவத் கீதா சாரம் என்னும் பேர் கொண்ட இந்த நூலின் பாடல்கள் நாற்பத்திரண்டு ஆகும். அதை தக்கவாறு சுருக்கி பகவான் ரமணர் நமக்கு தொகுத்து அளித்துள்ளார். இந்நூலினை ஓதும் பக்தர்களுக்கு மனம் ஈசனைவிட்டு நீங்காது.

மானமவ மான மருவிற் சமனாகி
யேனையருற் றார்களிலொப் பேய்ந்தோனாய்த் — தானே
தணந்தான் றனையகலாத் தன்முயற்சி யெல்லாங்
குணங்கள் கடந்தோனாக் கூறாய் — தணவா(து) 37

எவனான்மா வின்க ணிரமிப்பான் மற்று
மெவனான்மா விற்றிருத்தி யேய்ந்தா — னெவனான்மா
வின்கண்ணே யின்புற் றிருப்பா னவன்றனக்
கென்றுமே செய்வதற்கொன் றின்றாமே — யன்றியவன் 38

பண்ணும் வினையாற் பயனேது மெய்தலிலை
பண்ணா ததனாலும் பாவமிலை — நண்ணியவற்
கெவ்வுயிர்க ளாலுந்தா னெய்திடத் தக்கதா
மெவ்வித மாம்பொருளு மின்றெங்கு — மெவ்விதத்தும் 39

உற்றதாம் பேற்றி லுவப்புற்றான் றாந்தங்க
ளிற்றா னழுக்கா றிலாதவ — னொற்றுமை
பெற்ற வவற்றுப் பெறாதவற்றுற் றான்செய்த
லுற்றாலும் பந்த முறானென்றும் — பற்றற்றே 40

ஈச னுயிர்க ளெவற்றுள்ளுஞ் சேரிதயத்
தேசத்தி லென்றுந் திகழ்கின்றான் — பாசமா
மாயையா லெந்திரஞ்சேர் மன்னுயிர்கள் யாவினையு
மோயலற நின்றுழற்ற லுற்றுயிர்க — ணேயன் 41

அவனைச் சரண மடைகவெவ் வாற்று
மவனருளாற் சாந்தி யடைவா — யவனருளா
லீறில்லா வப்பதமு மெய்துவாய் பாரதனே
பேறிதனி லில்லை பிறவென்றே — கூறும் 42

---

பகவற்கீ தைப்பேர்ப் பனுவலின் சாரந்
தொகையாறே ழாகுஞ் சுலோகந் — தகவே
சுருக்கி ரமணன் றொகுத்தளித்த விந்நூ
லிருக்குமன மீசற் கிருப்பு.

– முருகனார்

## வாழ்த்து

*அருச்சுனற்குக் கீதை யருளினான் வாழி*
*விரிச்சுரைத்த நூலை மிகவே — சுருக்கியவிந்*
*நூல்வாழி வாழி நுவலடியார் சீரமணன்*
*றூல்வாழி வாழியருட் டாள்.*

– முருகனார்

வாழ்த்து

அருச்சுனனுக்கு கீதையை அருளியவன் வாழ்க. விரிவாகக் கூறப்பட்ட நூலை மிகவும் சுருக்கி செய்யப்பட்ட இந்நூல் வாழ்க. இதைப் படிக்கும் பக்தர்கள் வாழ்க. பகவான் ஸ்ரீ ரமணரின் திருவாய்மொழி வாழ்க. வாழ்க அவரது திருவடிகள்.

## பகவத் கீதாசாரம் – நூல் வரலாறு

‘உபநிஷத்துக்கள்’, ‘பிரம்மசூத்ரம்’, ‘பகவத்கீதை’, இந்த மூன்றும் ‘‘பிரஸ்தானத்ரயம்’’ எனக் கூறப்படும். இந்த மூன்றிலும் ‘‘பகவத் கீதை’’யானது தனிச் சிறப்புடையது.

சகல உபநிஷத்துக்களின் சாரத்தைப் பகவான் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு, கீதாம்ருதமாக வடித்துக் கொடுத்தார்.

இந்த ‘‘பகவத் கீதை’’ எழுநூறு சுலோகங்கள் கொண்டது. பதினெட்டு அத்தியாயங்களாக வகுக்கப்பட்டு இருக்கின்றன.

ரமண பகவானது சீரடியார் அன்பர் குர்ரம் சுப்பராமய்யா என்பவர், ஸ்ரீ பகவானை அணுகி, பகவத்கீதையை நித்ய பாராயணத்திற்கு அனுகூலமாக, அதை சுருக்கமாக வகுத்துத் தந்தருளுமாறு வேண்டினார்.

அவருடைய வேண்டு கோளுக்கிரங்கிய பகவான், எழுநூறு சுலோகங்களைக் கொண்ட பகவத் கீதையிலிருந்து, மணிகளைப் போன்ற நாற்பத்திரண்டு சுலோகங்களை எடுத்துத் தொகுத்துக் கொடுத்தார். அதுவே இந்த ‘‘பகவத் கீதாசாரம்’’ எனும் இவ்வரிய படைப்பு.

பிறகு ஸ்ரீ பகவான் அந்த நாற்பத்திரண்டு வடமொழி சுலோகங்களையும், தமிழிலும், மலையாளத்திலும் மொழி பெயர்த்து அருளியுள்ளார்.

--------